# விலைமனுக்களுக்கான அழைப்பு

**வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு**

**சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம் (ESCAMP)**

**வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்**

## வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பீட்(Beat) அலுவலகங்கள், யானை கட்டுப்படுத்தும் பணிமனைகள் மற்றும் கல்லோய தேசிய பூங்காவிற்கு 55 மோட்டார் சைக்கிள்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

**ஒப்பந்த இலக்கங்கள் : LK-ESCAMP-DWC-123593-GO-RFQ, LK-ESCAMP-DWC-123611-GO-RFQ,LK-ESCAMP-DWC-163970-GO-RFQ**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் பீட் அலுவலகங்கள், யானை கட்டுப்படுத்தும் பணிமனைகள் மற்றும் கல்லோய தேசிய பூங்காவிற்கு 55 மோட்டார் சைக்கிள்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் ESCAMP – செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

   கீழேயுள்ள அட்டவணையில் தேவைப்பாட்டின் சுருக்கப் பொழிவொன்று வழங்கப்பட்டுள்ளது.

| பண்டம் | எண்ணிக்கை/ அலகுகள் |
|---|---|
| புத்தம் புதிய மோட்டார் பைசிக்கள் 2020 (120-130 சீசீ) | 55 |

2. மேலே பட்டியலிட்டுள்ளவாறு விலைமனுதாரர்கள் மொத்த எண்ணிக்கையுள்ள மோட்டார் பைசிக்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு பகுதிக்கான விலைமனுக்கள் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து நடாத்தப்படுவதுடன் இலங்கை அரசாங்க பெறுகை வழிகாட்டிகளினால் நடைமுறையானது நிர்வகிக்கப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு தகுதித்தன்மை மற்றும் தகைமைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2021 மார்ச் 08 ஆம் திகதியிலிருந்து 2021 மார்ச் 29 ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். சாதாரண வேலை நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம். குறிப்பீடு செய்வதற்காக மாத்திரம் **www.escamp.lk** என்ற இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணத்தின் மாதிரியொன்றை பார்வையிடலாம். (தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு: 011 2888426/011 2888427)

5. 2021 மார்ச் 08 ஆம் திகதியிலிருந்து 2021 மார்ச் 29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்ட, செயற்றிட்ட கணக்காளரிடம் ரொக்கப் பணத்தில் இருத்தல் வேண்டும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, அவையிரண்டும் ஒரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அதன் மேற்பகுதியில் ஒப்பந்த இலக்கம், நிர்மாணத் தலைப்பு ஆகியன எழுதப்பட்டு 2021 மார்ச் 21 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் பத்தரமுல்ல, ரஜமல்வத்த வீதி, 82 ஆம் இலக்கத்திலுள்ள ''சம்பத்பாய'', சூழல் தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையின் மாநாட்டு அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலும் சேர்க்கப்படலாம். இலத்திரனியல் மூலம் அனுப்பப்படும் தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.

7. அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு, இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்படும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகைகள் பெ.சே.வ. நீங்கலாக 200,000 இ.ரூபாவாகும். விலைமனுப்பிணையானது 2021 ஜுலை 31 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத மற்றும் விலைமனுக்கோரல் ஆவணத்துடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக அமைந்திராத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2021 ஜுன் 30 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. விலைமனுக்கள் மற்றும் பலவற்றின் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் ஆகியன தொடர்பான விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பேற்க மாட்டார்.

10. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களுடன் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிசிஏ-3 படிவத்தையும் வழங்கல் வேண்டும்.

11. செயற்றிட்ட பெறுகைக் குழுவானது முழுமையாக அல்லது ஒரு பகுதியாக பெற்றுக் கொண்ட விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன் செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை,**
**சூழல்தொகுதி பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**“சம்பத்பாய”**
**இல. 82, ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**
**தொலைபேசி இல. 011 2888426**

**www.excamp.lk.**

**2021 மார்ச் 6 திகதி.**